
இந்தியாவில் பருவநிலை மாற்றம்: நாம் அறிவது என்ன? எவ்வாறு அறிந்தோம்?

COP28, உமிழ்வு-அளவைக் குறைத்தல் மற்றும் சூற்றுச்சூழல் நீதி: நிதர்சனம் என்ன?

ஐக்கிய நாடுகளின் பருவநிலை மாற்ற பணித்திட்ட பேரவையின் (UNFCCC 1992) கீழ் வருடாந்திர உலகளாவிய உறுப்பினர்களின் மாநாடுகள் (Conference of Parties, COPs) நிகழ்கின்றன. இவை 198 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பணித்திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் நிகழும் முன்னேற்றத்தை இம்மாநாடுகள் மதிப்பீடு செய்கின்றன.

சமத்துவ அடிப்படையிலும், பொதுவான ஆனால் நாடுகளின் வேறுபட்ட கடமைகளுக்கும், திறன்களுக்கும் ஏற்ற வகையில் இயங்குவது என்ற கொள்கையை உடையது UNFCCC. மேலும், வளரும் நாடுகள் புவிவெப்பமடைதலை எதிர்கொள்ள நிதி வழங்குதல், தொழில்நுட்பம் பகிர்தல் மற்றும் தேவையான திறனை வளர்க்கவும், உமிழ்வு-அளவைக் குறைப்பதில் முன்னோடியாக இருக்கவும் வளர்ந்த நாடுகள் கடமைப்பட்டிருக்கின்றன என்பதை இது வலியுறுத்துகிறது.

சமத்துவ கொள்கைகளின் அடிப்படையில் பசுமைவாயு (greenhouse gas) உமிழ்வு-அளவுகளை வளர்ந்த நாடுகள் குறைத்துள்ளனவா? கடந்த மூப்பது ஆண்டுகளின் தரவுகளை வைத்துப்பார்த்தால் இதற்கான விடை இல்லை என்பதே!



தொழில்மயமாதலுக்கு முந்தைய வெப்பநிலையைவிட 1.5 டிகிரி செல்சியஸுக்கு மேல் அதிகரிக்காமல் இருக்க தொடர்ச்சியான முன்னெடுப்புகளை மேற்கொள்வதாக COP28ல் (துபாய், 2023) தீர்மானிக்கப்பட்டது. இதனுடன், COP21ல் (பாரீஸ், 2015) ஒத்துக்கொண்டபடி வெப்பநிலை அதிகரிப்பு 2 டிகிரி செல்சியஸுக்கு கீழ் இருக்கவேண்டும். பருவநிலை மாற்றத்திற்கான பன்னாட்டு அரசுக் குழு கூறியுள்ளபடி, 2019ஐ ஒப்பிடுகையில் வருடாந்திர உலகளாவிய உமிழ்வு-அளவுகள் 2030ல் 43 சதவீதமும் 2040ல் 60 சதவீதமும் குறைக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

வளரும் நாடுகள் தங்களுடைய உமிழ்வு-அளவுகளைக் குறைப்பதில் தவறியிருக்கிறார்கள் என்பதாலும் வருங்காலம் குறித்து போதிய நம்பிக்கைகள் அளிக்காததாலும், COP28ன் உடன்படிக்கையின்படி வளர்ச்சி இலக்குகளையும் உமிழ்வு-அளவு கட்டுப்பாடுகளையும் ஈடுகட்டும் சுமை இந்தியா போன்ற வளரும் நாடுகளின் தலையில் விழுகிறது. IPCC உமிழ்வு-அளவு குறைப்பு இலக்குகளில் பொதிந்துள்ள கருத்துகளின்படி நாடுகளின் கடமைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்றவாறு இல்லாமல், செலவினங்கள் குறைவாக இருக்கக்கூடிய நாடுகள் உமிழ்வை அதிகளவு குறைக்க வேண்டும். இவை, பருவநிலை மாற்ற செயல்திட்டத்தின் சுமையை நியாயமான முறையில் பகிர வேண்டும் என்ற கொள்கைக்கு மாறாக இருக்கிறது.

இதற்குத் தகுந்த சமத்துவமான மாற்று என்பது, உமிழ்வு-அளவுகளை அதிரடியாக குறைக்கும் செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக, புதைபடிவ எரிப்பொருள் சார்ந்த ஆற்றல் தயாரிப்பை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலங்களைக் கொண்டு வளரும் நாடுகள் குறிப்பிடத்தக்க அளவு மாற்றியமைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, 2030ஐ எட்டும்போது USA ஆண்டுக்கு 1565 கிகா வாட்டாகவும் EU 538 கிகா வாட்டாகவும் தங்களின் புதுபிக்கத்தக்க ஆற்றல் தயாரிப்புத் திறனை அதிகரிக்கவேண்டும். இதை அவர்கள் செய்வார்களா?

கருத்தாக்கம்
T. Jayaraman & Peeyush Priya,
MS Swaminathan Research Foundation

UNFCC



COP28ல் போராட்டம்.
டிசம்பர் 12, 2023 துபாய், UAE

IISD/ENB, Mike Muzurakis

வடிவமைப்பு: Radha Sunder

@IMScChennai @SciSabha #SatS2024
The Institute of Mathematical Sciences
Science at the Sabha 2024
நிகழ்வுக்காக இந்தத் தொடர் தொகுக்கப்பட்டது

CC BY NC